பக்கங்கள்: 06

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 28 ஞாயிற்றுக்கிழமை 13.12.2020 கதிர் 268

## எதையும் மறைக்காமல் உண்மையைக் கூறுங்கள்

# பி.சி.ஆர். சோதனை செய்யுங்கள் கொத்தணிக்கு இடமளியாதீர்கள்

### யாழ். குடாநாட்டு மக்களிடம் இராணுவத் தளபதி வேண்டுகோள்



கொழும்பு, டிசெ. 13

யாழ்.குடாநாட்டில் புதிதாக அடையாளம் காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் எதையும் மறைக்காமல் உண்மைகளைக் கூற வேண்டும். அதே வேளை, அவர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் தங்களைத் தனிமைப் படுத்தி பி.சி.ஆர். பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும். அதைவிடுத்து மினுவாங்கொடை மற்றும் பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப் போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப் போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என இங்குள்ள மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம்.

2

## பம்பலப்பிட்டியவில் கரையொதுங்கிய ஆணின் சடலம்!

கொழும்பு, பம்பலப்பிட்டிக் கடற்கரைப் பகுதியில் ஆணொருவரின் சடலம் இன்று பகல் கரையொதுங்கியுள்ளது.

கடலில் நீராடச் சென்ற வேளை இவர் உயிரிழந்திருக்கலாம் என அப்பகுதியில் உள்ளவர்கள் தெரிவித்தனர்.

சடலத்தை மீட்டு பிரேத பரிசோதனைக் கான வைத்தியசாலைக்குக் கொண்டுசெல்லும் பணி இடம்பெற்று வருகின்றது.

இது தொடர்பில் பம்பலப்பிட்டிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வயோதிபர்கள் 92 பேர் கொரோனாவால் சாவு!

இலங்கையில் கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலை மூலம் கடந்த ஒக்டோபர் 4 ஆம் திகதி முதல் நேற்று வரை 136 பேர் உயிரிழந்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்தவர்களில் 92 பேர் 60 வயதைக் கடந்தவர்கள் என்று சுகாதார அமைச்சின் தரவுகள் தெரிவிக்கின்றன.

கொரோனா வைரஸ் தாக்கத்தால்

2

# உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு கொரோனா பேராபத்து வலயமாக அறிவிப்பு




## கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் தீவிரம்

**கொரோனா வைரஸ் அதி ஆபத்து வலயமாக உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இதையடுத்து தீவிர கொரோனாக் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் இந்தப் பகுதியில் அமுலாகின்றன.**

**நேற்று வரை ஆபத்துக் குறைந்த பகுதிக்கான பச்சை வர்ணத்தில் குறிக்கப்பட்டிருந்த உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் அதிகளவு கொரோனாத் தொற்று நோயாளர்கள் அடையாளப் படுத்தப்பட்ட நிலையிலேயே அதி ஆபத்து சிவப்பு வலயமாக சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவால் இன்று அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.**

2

## கொழும்பில் 14,107 பேருக்கு கொரோனா வைரஸ் உறுதி

கொரோனா வைரஸ் தாக்கத்தின் மூன்றாவது அலையால் ஒக்டோபர் 4 ஆம் திகதியில் இருந்து நேற்று வரை கொழும்பு மாவட்டத்தில் 14 ஆயிரத்து 107 பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 397 தொற்றாளர்கள் அடையாளம் காணப் பட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் தாக்கத்தால் கொழும்பு மாவட்டத்திலேயே அதிகளவானவர்கள் உயிரிழந்துள்ளனர். அத்துடன் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக கொழும்பில் சில பகுதிகள் தொடர்ந்தும் முடக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத் தக்கது.

2

## விரைவில் ‘மெகா’ கூட்டணி; ஐ.தே.கவும் இணையலாம்!

### மனோ அதிரடி அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தி தலைமையில் பாரிய அரசியல் கூட்டணி உருவாக்கப் படும். அதில் வேண்டுமானால் ஐக்கிய தேசியக் கட்சி இணையலாம்.

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான அவரின் முகநூல் பதிவு வருமாறு:-

ஐக்கிய மக்கள் சக்தி (ஐ.ம.ச.) கூட்டணியாக முதலில் உருவாக்கப்பட்டது.

2

## யாழ்ப்பாணத்தில் நேற்று 36 பேருக்குத் தொற்றுறுதி

### ஆதாரப்படுத்தியது கொரோனா ஒழிப்புச் செயலணி

யாழ்ப்பாணத்தில் நேற்று 36 பேருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்தத் தகவல் அரசின் தேசிய கொரோனா ஒழிப்புச் செயலணியின் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை வெளியிடப்பட்டுள்ள கடந்த 24 மணி நேரத்துக்கான புள்ளி விவரத்தில் குறித்த விபரம் தெரிவிக்கப் பட்டுள்ளது.

2

## வெளிநாட்டு தூதரகக் குழு யாழ்ப்பாணத்தில்!

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், டிசெ.13

கொழும்பில் உள்ள பல்வேறு வெளிநாட்டுத் தூதரகங்களைச் சேர்ந்த பாதுகாப்பு அதிகாரிகள் அடங்கிய குழு விசேட விமானம் மூலம் இன்று காலை பலாலிக்கு வருகை தந்து யாழ்ப்பாணத்தின் பல்வேறு பகுதிகளுக்கும் விஜயம் செய்து நிலைமைகளை நேரில் பார்வையிட்டது.

இந்த குழுவினருடன் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் மேஜர்ஜெனரல் கமால் குணரட்ண சேர்ந்து பயணித்தார்.

## மாகாண சபை தேர்தல்கள்; பழைய முறையே சாத்தியம்!

### தேர்தல் ஆணைக்குழுவின் புதிய தலைவர் தெரிவிப்பு

தற்போதைய நிலைமையில் மாகாண சபைகளுக்கான தேர்தலை விரைந்து நடத்துவதாக இருந்தால் பழைய முறையிலேயே அதனை முன்னெடுக்க முடியும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழுவின் புதிய தவிசாளர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.

அத்துடன், தற்போது நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டுள்ள மாகாணசபைத் திருத்தச்சட்டத்தின் பிரகாரம் தேர்தலை நடத்துவதாக இருந்தால் மேலும் சில வருடங்கள் தேவைப்படும் என்று சுட்டிக்காட்டிய அவர், தேர்தலை நடத்துவது தொடர்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சட்டவாக்கற்றுறையான நாடாளுமன்றத்திடமே காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

2

## மஹர சிறை வன்முறை தொடர்பில் இதுவரை 255 பேரிடம் வாக்குமூலம்

கொழும்பு, டிசெ.13

மஹர சிறைச்சாலை மோதல் சம்பவம் தொடர்பில் சி.ஐ.டியினர் இதுவரை 255 பேரிடம் வாக்கு மூலங்களைப் பதிவு செய்துள்ளனர் என்று பொலிஸ் பேச்சாளரும் பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் றோஹண தெரிவித்தார்.

சிறைச்சாலை வைத்தியசாலையில் பணியாற்றிய வைத்தியர்கள், சம்பவத்தின்போது சிறையில் இருந்த கைதிகள், சிறைச்சாலை அதிகாரிகள் உட்பட மேலும் சிலரிடமே இவ்வாறு வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

நேற்று மாத்திரம் 27 பேரிடம் வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன எனவும் பொலிஸ் பேச்சாளர் மேலும் கூறினார்.

## மாகாண சபை தேர்தல் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாடாளுமன்றத்தில், பழைய முறைமையில் மாகாணங்களுக்கான தேர்தலை நடத்துவதற்குரிய தீர்மானம் நிறைவேற்றப்பட்டு ஆணைக்குழுவுக்கு அனுப்பப்படும் பட்சத்தில் உடன் தேர்தலை நடத்தவதற்குத் தயாராக இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்த வேண்டும் என்பதில் நாம் உறுதியாக உள்ளோம். இந்த விடயத்தில் கவனம் எடுக்குமாறு பிரதமரும் ஆலோசனை வழங்கியுள்ளார்.

எனினும், மாகாண சபைகளுக்கான தேர்தலை நடத்துவது தொடர்பில் சட்டவாக்கற்றுத்துறையான நாடாளுமன்றமே தீர்மானமொன்றை எடுக்க வேண்டும். தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு தீர்மானம் எடுக்கும் அதிகாரம் இல்லை. ஆகவே புதிய முறையிலோ அல்லது பழைய முறையிலோ தேர்தலை நடத்து என்பது தொடர்பில் நாடாளுமன்றமே தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

மேலும், புதிய முறையில் தேர்தலை முன்னெடுப்பதாக இருந்தால் சில வருட கால அவகாசம் தேவையாக உள்ளது. ஆகவே பழைய முறைமையிலேயே தேர்தலை நடத்துவதே சமகால நிலைமைகளின் அடிப்படையில் சாத்தியமானதாக இருக்கும்.

ஆகவே நாடாளுமன்றத்தில், மாகாண சபைகளுக்கான தேர்தல் புதிய முறைமையில் நடத்தப்படுவது சொற்பகாலத்துக்கு ஒத்திவைக்கப்படுவதாகவும் அதுவரையில் பழைய முறையிலேயே அவற்றுக்கான தேர்தலை நடத்தவுள்ளதாகவும் அரசியல் தீர்மானம் எடுக்க வேண்டியுள்ளது.

அந்தத் தீர்மானம் நாடாளுமன்றில் நிறைவேற்றப்பட்டு எமக்கு அனுப்பி வைக்கப்படும் பட்சத்தில் தேர்தலை நடத்துவதில் ஆணைக்குழுவுக்கு எவ்வித மான சிக்கல்களும் இல்லை. உடன் தேர்தலை நடத்துவதற்கான பணிகளை முன்னகர்த்தத் தயாராகவே உள்ளோம். - என்றார்.

## விரைவில் ‘மெகா..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேர்தலுக்குப் பின்னர் ஐக்கிய தேசியக் கட்சி, சஜித் வசமாகும் என்ற எதிர்பார்ப்பை, ரணில் மீண்டும் தவிடுபொடி ஆக்கியதால், ஐ.தே.கவை மீண்டும் மறுசீரமைக்கும் எண்ணம் இப்போது கைவிடப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தி தனிக்கட்சியாக வளர்தெடுக்கப்படும். அதையடுத்து ஐக்கிய மக்கள் கூட்டணி உருவாக்கப்படும். அதில் ஐக்கிய மக்கள் சக்தியுடன் தமிழ் முற்போக்குக் கூட்டணி உட்பட பங்காளிக் கட்சிகள் இணைந்து பாரிய எதிரணி கூட்டணியாக அது உருவாக்கப்படும். இதில் ஒரு பங்காளியாக ஐக்கிய தேசியக் கட்சி விரும்பினால் இணையலாம்.

இந்தப் பொது நோக்கில் இன்று சம்பிக்க ரணவக்க, ராஜித சேனாரத்ன, குமார வெல்கம போன்றோர் ஐக்கிய மக்கள் சக்தியில் நேரடியாக இணைந்து, எமது கூட்டணியின் பிரதான கட்சியான அதைப் பலப்படுத்துகின்றார்கள். பாரிய எதிரணி கூட்டணியை உருவாக்கும் இந்த நடவடிக்கைகளை நாம் ஆதரிப்போம் என்றுள்ளது.

## யாழ்ப்பாணத்தில் ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, யாழ்ப்பாணத்தில் நேற்று 6 பேருக்கே கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த.சத்தியமூர்த்தி தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

## கொழும்பில் 14,107 ........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதேவேளை, மூன்றாவது அலையால் கம்பஹா மாவட்டத்தில் 7 ஆயிரத்து 451 பேர் பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. நேற்று மாத்திரம் 50 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

களுத்துறை மாவட்டத்தில் ஆயிரத்து 804 பேர் பேருக்கு வைரஸ் தொற்றியுள்ளது. அங்கு நேற்று மாத்திரம் 136 தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

## உடுவில் சுகாதார ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்தநிலையில், தனிமைப்படுத்தல் சட்டத்தின் கீழ் இந்தப் பகுதிளுக்கு நுழைவது, அங்கிருந்து வெளியேறிவது உள்ளிட்ட நடவடிக்கைள் கடுமையாகக் கண்காணிக்கப்பட்டுத் தடுக்கப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கொரோனாக் கட்டுப்பாட்டு செயற்றிட்டங்களும் இந்தப் பகுதியில் தீவிரமாக அமுல் செய்யப்படும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவு நேற்றிரவிலிருந்து மறு அறிவித்தல் வரை முடக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

வடக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளரின் ஆலோசனைக்கமைவாக யாழ். மாவட்ட அரச அதிபரால் இந்த முடக்கல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தமையும் சுட்டிக்காட்டத்தக்கது.

## பி.சி.ஆர். சோதனை .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா கோரியுள்ளார்

யாழ். மருதனார்மடத்தில் திடீரெனக் கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றமை தொடர்பில் கருத்துரைக்கும்போதே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனாவை ஒழிக்கும் நடவடிக்கைக்கு யாழ். மாவட்ட மக்கள் முழுமையான ஒத்துழைப்பை வழங்கி வந்தார்கள். இந்தநிலையில், இங்கு பொதுமக்கள் அதிகம் ஒன்றுகூடும் பகுதியிலிருந்து கொரோனாத் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டு வருகின்றார்கள் என்ற தகவல் எமக்கு அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

பெரும்பாலும் வெளியில் இருந்துதான் கொரோனா வைரஸ் தொற்றியிருக்கக் கூடும். தொற்றாளர்கள் தாம் சென்று வந்த இடங்கள் தொடர்பில் எதையும் மறைக்காமல் உண்மைகளைக் கூற வேண்டும்.

வர்த்தகர்கள் இந்த விடயத்தில் பொறுப்புடன் நடக்க வேண்டும். அவர்கள் வெளியிடங்களில் வர்த்தக ரீதியில் தொடர்புகளை வைத்திருப்பவர்கள். அவர்கள் அனைவரும் பி.சி.ஆர். பரிசோதனையைச் செய்ய வேண்டும்.

அதேவேளை, புதிய தொற்றாளர்களுடன் நெருங்கிப் பழகிய அனைவரும் தங்களைத் தனிமைப்படுத்தி பி.சி.ஆர். பரிசோதனையைக் கட்டாயம் செய்ய வேண்டும்.

இந்த விடயத்தில் யாழ். குடாநாட்டு மக்கள் அனைவரும் பொறுப்புடன் நடக்க வேண்டும்; சுகாதாரப் பிரிவினர் மற்றும் பாதுகாப்புப் படையினர் ஆகியோரின் கடமைகளுக்குத் தொடர்ந்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

மினுவாங்கொடை, பேலியகொட போல் பெரிய கொத்தணிகளைப்போன்றோ அல்லது அக்கரைப்பற்று போல் சிறிய கொத்தணியைப்போன்றோ ஒரு நிலைமை யாழ்.குடாநாட்டிலும் ஏற்பட இடமளிக்க வேண்டாம் என இங்குள்ள மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். - என்றார்.

## வயோதிபர்கள் 92 பேர் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

10 - 30 வயதுக்கிடைப்பட்ட 3 பேரும், 31 - 40 வயதுக்கிடைப்பட்ட 4 பேரும், 41 - 50 வயதுக்கிடைப்பட்ட 13 பேரும், 51 - 60 வயதுக்கிடைப்பட்ட 23 பேரும், 61 - 70 வயதுக்கிடைப்பட்ட 29 பேரும், 74 வயதுக்கு மேற்பட்ட 64 பேரும் இதுவரை உயிரிழந்துள்ளனர்.

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622



# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com


## சுகாதாரக் குழப்பங்கள்

**நாட்டைப் பெரும் நெருக்கடிக்குள்ளும் இக்கட்டுக்குள்ளும் தள்ளியிருக்கும் விவகாரம் கொரோனா எனும் கொடும் அரக்கனின் கைவரிசைதான்.**

**ஒவ்வொரு வீட்டிலும், ஒவ்வொருவரின் வாழ்விலும், பெரும் தாக்கத்தை – பெரும் பின்னடைவை – அந்தக் கொரோனாத் தொற்று ஏற்படுத்தியிருக்கின்றது.**

**இந்தக் குரூர அரக்கன் தங்களையும் பீடித்துத் தங்கள் வாழ்வையும் சின்னா பின்னமாக்கிச் சிதைத்துக் குட்டிச் சுவராக்கி விடுவானோ என்ற அச்சத்துடனேயே – பீதியுடனேயே – ஒவ்வொருவரினதும் வாழ்வும் கழிகின்றது என்பது கண்கூடு.**

**ஆனால், தேசிய ரீதியில் இந்தக் கொரோனா வைரஸ் கட்டுப்பாட்டு நடவடிக்கைகள் சந்தி சிரிக்கின்றன என்று பார்த்தால் யாழ்ப்பாணத்திலும் – வடக்கிலும் – நிலைமை அத்தகையதுதான் என்பது கவலைக்குரிய உண்மையாக இருக்கின்றது.**

**மருத்துவத் துறையினர் – குறிப்பாக சுகாதாரத் துறையினர் – தங்கள் உயிர்களைத் துச்சமொன மதித்து, பெரும் நெருக்கடிகளுக்கு மத்தியிலும் அளப்பரிய சேவை செய்கின்றார்கள் என்பது நாம் தினமும் கண்டறியும் உண்மை.**

**ஆனால் அதிகார வர்க்கத்தில் சில தரப்புகளின் பொறுப்பற்ற போக்கால் – செயற்பாட்டால் – இங்கும் சந்தி சிரிக்கும் நிலைமை ஏற்பட்டுள்ளது.**

**மருதனார் மடத்தில் கொரோனாத் தொற்றாளி ஒருவர் எழுமாற்றாக நடத்திய சோதனை ஆய்வின் போது கண்டுபிடிக்கப்பட்டார் என்ற செய்தி நேற்று முன்தினம் மாலை வெளியானமை தொடக்கமே யாழ்ப்பாணத்தில் பதற்ற நிலை தொற்றிக் கொண்டு விட்டது.**

**இதற்கிடையில் நேற்று மாலை மேலும் 31 பேர் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டனர் என சில ஊடகங்களில் செய்தி வெளியாகின.**

**ஆனால் யாழ். சுகாதார மருத்துவ அதிகாரிகள் அந்தக் கணக்கை ஊர்ஜிதப்படுத்தவில்லை. ஆக ஆறே ஆறு பேருக்கு மட்டுமே யாழ் . குடாநாட்டில் நேற்றுத் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதாக அவர்கள் கூறினர்.**

**அதுவும் நேற்று முன்தினம் தொற்று அடையாளம் காணப்பட்டவரின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களே அந்த அறுவரும் என்றும், அவர்கள் அறுவரும் ஒரே வீட்டைச் சேர்ந்தவர்கள் என்றும் கூறப்பட்டது.**

**ஆனால் ஒரு வீட்டுக்குள் அறுவருக்குத் தொற்றுக் கண்டுபிடிக்கப்பட்டதும், உடுவில் பிரதேச செயலர் பிரிவு முழுவதும் முடக்கப்பட்டதாக நேற்றிரவு அறிவிக்கப்பட்டது.**

**அந்தப் பிரதேச செயலர் பிரிவில் மொத்தம் மூன்று கிராம சேவையாளர் பிரிவுகள் உள்ளன. மேற்படி தொற்று இருபத்தியெட்டு கிராமசேவையாளர் பிரிவுகளில் பரவும் ஆபத்து இருப்பதாக அப்போது எதிர்வு கூறப்பட்டது.**

**அதுதான் எப்படி என்பது மக்களுக்குப் புரியவில்லை. ஒரே வீட்டில் ஒரே குடும்பத்துக்கு மட்டும் தொற்று பரவியிருக்கையில், அதனால் அல்லது அதனைக் காரணம் காட்டி முழு பிரதேச செயலர் பிரிவையும் முடக்கும் நடவடிக்கை ஏன் என்று பல தரப்பினராலும் விசாரிக்கப்பட்டது.**

**உண்மையில் நேற்று யாழ்ப்பாணத்தில் கண்டுபிடிக்கப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை நேற்றிரவு அதிகாரிகள் கூறியமை போல ஆறு அல்ல, ஊடகங்களில் வெளிவந்தபடி 31தான், ஆனால் அவற்றை அரசு அதிகாரிகள் மூடி மறைத்து விட்டார்கள் என்ற குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டது. ஆனால் அதிகாரிகள் தரப்பில் இது மறுக்கப்பட்டது.**

**எனினும், இன்று அதிகாலை கொழும்பில் கொரோனாத் தடுப்புக்கான செயலணி விடுத்த அறிவிப்பில் யாழ்ப்பாணத்தில் நேற்று 36 கொரானாத் தொற்று நோயாளர்கள் கண்டு பிடிக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.**

**அது எப்படி யாழ்ப்பாணத்தில் உத்தியோகபூர்வ அறிவிப்பில் மருதனார்மடத்தில் ஆக ஆறே ஆறு தொற்றாளர்களே கண்டு பிடிக்கப்பட்டனர் எனத் தெரிவிக்க, கொழும்பில் தேசிய ரீதியான செயலணி 36 பேர் கண்டுபிடிக்கப்பட்டனர் என அறிவிக்கின்றது என்ற கேள்வி எழுப்பப்பட்டது.**

**யாழ்ப்பாணத்தில் பதில் தரவல்ல சுகாதார உயரதிகாரி ஒருவர் இது தொடர்பில் இரண்டு வித விளக்கங்களை ஊடகவியலாளர்களுக்கு வழங்கியிருக்கின்றார்.**

**" இங்கு ஊடகங்களில் வந்த தகவல்களைப் பார்த்து அப்படிக் கொழும்பில் அறிவித்து விட்டார்கள்". – என்பது ஒரு பதில்.**

**"வெளிமாவட்டங்களில் இருந்து வந்து வடக்கில் உள்ள தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளோரின் எண்ணிக்கையையும் சேர்த்து அப்படிக் குறிப்பிட்டு விட்டார்கள்" – என்பது மற்றைய பதில்.**

**இரண்டுமே சளாப்பல் பதில்கள். பொறுப்பான அறிவிப்போ, தகவலோ அல்ல என்பது வெளிப்படையானது.**

**கொரோனாத் தொற்று விடயத்தில் மக்கள் தொடர்பாடல், தகவல் வெளியீடு, பொதுசன ஊடாட்டம் போன்றவை வடக்கில் ஒழுங்குபடுத்தப்பட வேண்டும் என்பதையே இந்நிலைமை காட்டி நிற்கின்றது.**

**ஜனாதிபதியின் நேரடிப் பிரதிநிதியான ஆளுநருக்கு இவ்விடயங்கள் சமர்ப்பணம். நிலைமையைத் திருத்தச் செய்வது அவர் பொறுப்பு.**

## வான்பரப்பில் இன்றும் நாளையும் தென்படும் எரிகற்களின் வீழ்ச்சி



இலங்கை மக்களால் எதிர்வரும் இரண்டு நாள்களுக்கு எரிகற்கள் மழை வீழ்ச்சியை தெளிவாகப் பார்வையிட முடியும் என ஆதர்சி கிளார்க் நிறுவகம் தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கை வான்பரப்பில் இன்றும் (ஞாயிற்றுக்கிழமை) நாளையும் எரிகற்கள் மழைவீழ்ச்சியைப் பார்க்க முடியுமென அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது.

இன்று இரவு 9 மணிக்குப் பின்னர் கிழக்கு வானிலும் நள்ளிரவில் தலைக்கு மேலான வான்பரப்பிலும் அதிகாலைப் பொழுதில் சூரியன் உதிப்பதற்கு முன்னர் மேற்கு வானிலும் இதனை தெளிவாக காண முடியும் என அந்த நிறுவகம் தெரிவித்துள்ளது.

எவ்வாறாயினும் இந்த எரிகற்கள் நேரடியாக பூமியில் விழாது என்றும் அதனால் ஆபத்துகள் இல்லை என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தமுறை மணிக்கு 130 எரிகற்கள் அளவில் வீழ்வது இலங்கை வான்பரப்பில் தெளிவாக காட்சியளிக்கும் என்பதோடு, இவை பல வண்ணங்களில் பயணிக்கும் என்பதாலும் இதற்கு 'ஜெமினிட்ஸ் எரிகல்வீழ்ச்சி' என்று பெயரிடப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

வால் நட்சத்திரங்கள் விட்டுச்சென்ற துகள்களின் வழியே புவி பயணிக்கும் போது இந்த காட்சிகள் தென்படும் என்றும் எரிகற்களானது மணித்தியாலத்துக்கு ஒரு லட்சத்து 35 ஆயிரம் கிலோமீற்றர் வேகத்தில் விழும் எனவும் அந்த நிறுவகம் குறிப்பிடப்படுகிறது.

## 504 இலங்கையர் நாடு மீண்டனர்!

கொழும்பு. டிசே. 13

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல்வேறு நாடுகளில் சிக்கித் தவித்த மேலும் 504 இலங்கையர்கள் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அதிகாலை நாடு திரும்பியுள்ளனர்.

அதன்படி டுபாயிலிருந்து 144 பேரும் மாலைத்தீவிலிருந்து 31 பேரும் கட்டாரிலிருந்து 51 பேரும் ஆஸ்ரேலியாவிலிருந்து 75 பேரும் ஜப்பானிலிருந்து 203 பேரும் இன்று அதிகாலை கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

விமான நிலையத்தை வந்தடைந்த அனைத்து பயணிகளும் தனியார் வைத்தியசாலையின் ஊழியர்களால் பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டனர்.

அதனைத் தொடர்ந்து, தனிமைப்படுத்தல் நடவடிக்கைகளுக்காக அவர்கள் அனைவரும் அழைத்துச் செல்லப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத் தக்கது.

## பேலியகொட புதிய மெனிங் சந்தை வர்த்தகத்துக்கு திங்கள் திறப்பு!

**கொழும்பு. டிசே. 13**

**பேலியகொடை புதிய மெனிங் சந்தை நாளை திங்கட்கிழமை திறக்கப்படவுள்ளது.**

**மேலும், மொத்த வர்த்தக நடவடிக்கைகளுக்குமாத்திரமே மேற்படி மெனிங் சந்தை திறக்கப்படவுள்ளதாக மெனிங் சந்தை வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.**

**அத்தோடு, குறித்த சந்தை திங்கட்கிழமை மாலை 4 மணி முதல் இரவு 12 மணி வரை திறக்கப்படவுள்ளமையும் குறிப்பிடதக்கது.**

## பண்டிகைக் காலத்திலும் நாடு முடக்கப்படமாட்டாது!



இலங்கையில் எதிர்வரும் பண்டிகைக் காலத்தில் மேலும் நடமாட்டக் கட்டுப்பாடுகளை விதித்து, பிரதேசங்களை தனிமைப்படுத்தவோ, ஊரடங்கு உத்தரவை அமுலாக்கவோ தேவை ஏற்படாது என கொவிட்-19 தொற்றுப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு நிலையத்தின் தலைவர் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–கடந்த 51 நாள்களாக முடக்கப்பட்டிருந்த சில வீடமைப்புத் திட்டங்களில் தனிமைப்படுத்தல் நீக்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

தனிமைப்படுத்தல் நீக்கப்பட்ட ஆறு வீடமைப்புத் தொகுதிகள் சார்ந்த பொலிஸ் பிரிவுகளில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் ஊரடங்குச் சட்டம் அமுலாகிறது.

அந்தப் பிரதேசங்களில் மேற்கொள்ளப்படும் பி.சி.ஆர். பரிசோதனை பெறுபேறுகளுக்கு அமைய எதிர்காலத்தில் அவற்றையும் நீக்குவது தொடர்பானதீர்மானத்தைமேற்கொள்ளக்கூடியதாக இருக்கும் என்றும் லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா மேலும் தெரிவித்தார்.

## மஹர சிறைக் களேபரம்; 255 வாக்குமூலங்கள் பதிவு



மஹர சிறைச்சாலையில் அண்மையில் ஏற்பட்ட அமைதியின்மை தொடர்பாக நேற்றைய தினம் மேலும் 27 வாக்குமூலங்கள் பதிவுசெய்யப்பட்டுள்ளன என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவற்றுள் 11 வாக்குமூலங்கள் சிறை அதிகாரிகளிடமும், 16 வாக்குமூலங்கள் கைதிகளிடமும் பதிவுசெய்யப்பட்டுள்ளன என பிரதிப் பொலிஸ் மா அதிபரும் பொலிஸ் ஊடகப் பேச்சாளருமான அஜித் றோஹண குறிப்பிட்டார்.

நவம்பர் 29 முதல் இந்த சம்பவம் தொடர்பாக மொத்தம் 255 அறிக்கைகள் பதிவுசெய்யப்பட்டுள்ளன.

அத்துடன் நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட ஐந்துபேர்கொண்ட குழு இதுவரை இக்கலவரத்தில் உயிரிழந்தவர்களில் இரண்டு கைதிகளின் சடலங்கள் மீது பிரேத பரிசோதனை நடத்தியும் உள்ளது.

கலவரத்தைத் தூண்டியவர்களை அடையாளம் காண குற்றவியல் விசாரணைத் துறை இந்த விவகாரம் தொடர்பாகத் தொடர்ந்து விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் அவர் கூறினார்.

## நாடாளுமன்றத் தாக்குதல்:

# உயிர்த் தியாகம் செய்த வீரர்களின் நினைவிடத்தில் தலைவர்கள் அஞ்சலி



நாடாளுமன்றத் தாக்குதலின்போது உயிர்த்தியாகம் செய்த வீரர்களின் நினைவிடத்தில் பிரதமர் நரேந்திர மோடி உள்ளிட்ட பல்வேறு தலைவர்கள் அஞ்சலி செலுத்தினர்.

டெல்லியில் 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் 13 ஆம் திகதி நாடாளுமன்ற வளாகத்திற்குள் பயங்கரவாதிகள் புகுந்து தாக்குதல் நடத்தினர். பாதுகாப்பு படையினரும் பதிலடி கொடுத்தனர். இதில் 14 பேர் உயிரிழந்தார்கள்.

இவர்களில் 5 பேர் பயங்கரவாதிகள், 9 பேர் பாதுகாப்பு படையினர். 15 இற்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்தனர்.

இந்நிலையில் நாடாளுமன்ற வளாகத்தில் தாக்குதல் நடத்தப்பட்டதன் 19 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று அனுஷ்டிக்கப்பட்டது.

இதனை முன்னிட்டு நாடாளுமன்ற வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள, உயிர் தியாகம் செய்த வீரர்களின் நினைவிடத்தில் துணை ஜனாதிபதி வெங்கையா நாயுடு, மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, பிரதமர் மோடி, உட்துறை அமைச்சர் அமித்ஷா, பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் மற்றும் பல்வேறு தலைவர்கள் மலர் தூவி அஞ்சலி செலுத்தினர்.

## ராஜஸ்தான் விபத்தில் 10 பேர் சாவடைந்தனர்

### பிரதமர் மோடி இரங்கல்

ராஜஸ்தான் மாநிலம் - சிட்டோர்கர் பகுதியில் இடம்பெற்ற வாகன விபத்தில் 10 பேர் உயிரிழந்துள்ளமையுடன் மூவர் காயமடைந்துள்ளனர்.

நேற்று (சனிக்கிழமை) நள்ளிரவு, உதய்பூர் - நிம்பஹாரே நெடுஞ்சாலையில் சென்றுக் கொண்டிருந்த ஜீப் ஒன்றும் எதிரே வந்த லொறி ஒன்றும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து சம்பவித்துள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

மேலும், சம்பவ இடத்திலேயே நான்கு பேர் உயிரிழந்தனர். ஏனையோர் சிகிச்சைக்காக வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டனர்.

இதில், 6 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளனர் என வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இந்நிலையில் சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

இதேவேளை இந்த விபத்தில் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு பிரதமர் நரேந்திர மோடி இரங்கல் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நாடாளுமன்றத்தின் மீது தாக்குதல்களை நடத்தியவர்களை இந்தியா மன்னிக்காது!

### பிரதமர் மோடி கோபாவேசம்

**நாடாளுமன்றத்தின் மீது 2001 ஆம் ஆண்டு கோழைத்தனமாக தாக்குதல் நடத்தியோரை இந்தியா ஒருபோதும் மன்னிக்காது என்று பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.**

கடந்த 2001 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 13 ஆம் திகதி நாடாளுமன்றத்தின் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில், பாதுகாப்புப்படையை சேர்ந்த வீரர்கள் 8 பேர் உட்பட 9 பேர் உயிரிழந்த நிலையில், தீவிரவாதிகள் 5 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இந்தத் தாக்குதல் சம்பவத்தின் 19 ஆம் ஆண்டு நினைவு தினம் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அனுஷ்டிக்கப்பட்டது.



இதனை முன்னிட்டு டுவிட்டரில் பிரதமர் மோடி வெளியிட்டுள்ள பதிவில், நாடாளுமன்றத்தைப் பாதுகாப்பதற்காக உயிர் இழந்தவர்களின் வீரம் மற்றும் தியாகத்தை நினைவு கூர்கிறார் எனவும், அவர்களுக்கு இந்தியா எப்போதும் நன்றிக் கடன்பட்டுள்ளது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

## முக்கிய நகரங்களை தாக்க தீவிரவாதிகள் திட்டம் தீட்டல்!

### உளவுத்துறை எச்சரிக்கை

டெல்லி உள்ளிட்ட முக்கிய நகரங்களில், தீவிரவாதத் தாக்குதல் நடத்த பெண் தீவிரவாதிகள் குழு தயாராகி வருவதாக மத்திய அரசுக்கு உளவுத்துறை எச்சரிக்கை விடுத்துள்ளது.

மலேசியாவின் மதப்பிரசாகரான ஜாகிர் நாயக்குடன் தொடர்புடைய பணப்பரிவர்த்தனைகளை ஆராயப்பட்டபோது, தீவிரவாதிகளுக்குப் பணம் கைம்மாறியதாகத் தகவல் கிடைக்கப்பெற்றுள்ளதாக உளவுத்துறை சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும், இந்தியாவில் தாக்குதல் நடத்தவே இந்தப் பணம் கைமாற்றப்பட்டதாகவும், பெண் தலைமையிலான தீவிரவாதக் குழு தாக்குதலை நடத்த மியான்மாரில் பயிற்சியளிக்கப்பட்டுள்ளதாகவும் உளவுத் துறைஎச்சரிக்கை விடுத்துள்ளது.



இந்தத் தகவலைத் தொடர்ந்து டில்லி, அயோத்தி உள்ளிட்ட நகரங்களிலும் ஹரியானா, பீகார் உள்ளிட்ட அண்டை மாநிலங்களிலும் பாதுகாப்பு பலப்படுத்தப்பட்டுள்ளதாக இந்திய ஊடகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## லாலுபிரசாத் யாதவ்வின் உடல்நிலை கவலைக்கிடம்!

### வைத்தியர் உமேஷ் பிரசாத் தெரிவிப்பு

ராஷ்ட்ரிய ஜனதா தளம் கட்சியின் தலைவரும், பீகார் முன்னாள் முதலமைச்சருமான லாலு பிரசாத் யாதவின் உடல்நிலை மிகவும் மோசமடைந்துள்ளதாக அவருக்கு சிகிச்சையளித்து வரும் வைத்தியர் உமேஷ் பிரசாத் தெரிவித்துள்ளார்.

மேலும், அவருடயை சிறுநீரகம் எப்போது வேண்டுமானாலும் செயலிழந்து விடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த விடயத்தை எழுத்து பூர்வமாக அதிகாரிகளுக்குத் தெரிவித்திருப்பதாக வைத்தியர் உமேஷ் பிரசாத் சுட்டிக்காட்டியுள்ளார்.

ஜார்க்கண்ட் மாநிலம் - ராஞ்சியிலுள்ள ராஜேந்திரா மருத்துவ அறிவியல் நிறுவன வைத்தியசாலையில் லாலு பிரசாத் யாதவுக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## ஆந்திராவில் மர்ம நோயின் தாக்கம்: 615 பேர் பாதிப்பு; அச்சத்தில் மக்கள்!

ஆந்திராவில் பரவி வரும் மர்ம நோயால் 615 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தகவல் வெளியாகி உள்ளது.

ஆந்திர மாநிலம் - மேற்கு கோதாவரி மாவட்டத்தில் மர்ம நோய் பரவுவதற்கு அரிசி, காய்கறிகளில் கலந்திருக்கும் பூச்சி கொல்லிகளே காரணம் என புதிய தகவல் வெளியாகி உள்ளது.

ஆந்திர மாநிலம் எலூரில் வேகமாகப் பரவி வரும் மர்ம நோயால் சாலையில் நடந்து செல்பவர்கள் திடீரென மயங்கி விழுகின்றனர் எனவும் வைத்தியசாலையில் சேர்க்கப்படுபவர்கள் வலிப்பு நோயுடன், நுரை நுரையாக வாந்தி எடுக்கின்றனர் எனவும் கூறப்படுகிறது.

இதனால் மக்கள் பீதி அடைந்துள்ள நிலையில், இதுவரை மர்ம நோய்க்கு 3 பேர் உயிரிழந்துள்ளனர். மேலும், 600 இற்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வீடு திரும்பியுள்ளனர்.



இந்நிலையில், மாநில அரசால் இரத்த மாதிரிகளில் இருந்த ஈயம் மற்றும் நிக்கலின் தடயங்களை, டெல்லி எய்ம்ஸ் மற்றும் இந்திய வேதியியல் தொழில்நுட்ப நிறுவனத்துக்கு சோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

ஹைதராபாத் தேசிய ஊட்டச்சத்து நிறுவன வல்லுநர்கள் இது தொடர்பாகத் தெரிவிக்கையில், அரிசியில் கலந்திருக்கும் பாதரசமும், காய்கறிகளில் நிர்ணயிக்கப்பட்ட அளவை விட அதிக அளவில் இருந்த பூச்சிக்கொல்லிகளும் தான் காரணம் என்று தெரிவித்துள்ளனர்.


# கல்யாணமாலை

## வட சர்வதேச திருமண சேவை

**மணமகன் விவரம்**

பிறந்த திகதி - 1988.08.21
மதம் - இந்து V
நட்சத்திரம் - அனுசம்
செவ் - 7இல்
பாவம் - 48
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

**மணமகள் விவரம்**

பிறந்த திகதி - 1988.08.22
மதம் - இந்து V
நட்சத்திரம் - கேட்டை
பாவம் - 14
செவ் - -------
கல்வி - MBBS
தொழில் - Doctor
எதிர்பார்ப்பு - Doctor OR Engineer

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம்,
சந்தை வீதி,
இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி.

077 3434 415
077 8578 528

# அவசர காலநிலையை அறிவிக்குமாறு உலகநாடுகளிடம் ஐ.நா. வேண்டுகோள்!



அழிவுதரும் புவி வெப்பமடைதலைத் தவிர்ப்பதற்காக, தங்கள் நாடுகளில் அவசரநிலையை அறிவிக்குமாறு ஐக்கிய நாடுகள் சபையின் தலைவர் அன்டோனியோ குடரெஸ் உலகத் தலைவர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

இதேவேளை, உலகளாவிய சமூகம் தமது செயற்பாட்டை மாற்றாவிட்டால், இந்த நூற்றாண்டில் பேரழிவுகரமான வெப்பநிலை அதிகரிப்பை நோக்கி உலகம் செல்லக்கூடும் என அவர் எச்சரித்துள்ளார்.

பரிஸ் காலநிலை ஒப்பந்தத்தின் ஐந்தாம் ஆண்டு நிறைவு நாளில் மெய்நிகர் உச்சி மாநாட்டில் அன்டோனியோ குடரெஸ் தனது முதன்மை உரையை நிகழ்த்தியபோதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இங்கிலாந்து, ஐ.நா. மற்றும் பிரான்ஸ் ஏற்பாடு செய்திருந்த இந்த மாநாட்டில் 70 இற்கும் மேற்பட்ட உலகத் தலைவர்கள் உரையாற்றவுள்ளனர்.

இந்நிலையில் அன்டோனியோ குடரெஸ் உரையாற்றுகையில், 'பரிஸில் மாநாட்டில், ஐந்து ஆண்டுகளுக்கு முன்பு உலக வெப்பநிலை அதிகரிப்பை முடிந்த வரை 1.5 டிகிரி செல்சியஸ் (2.7 டிகிரி பாரன்ஹீட்) ஆகக் கட்டுப்படுத்துவதாக நாடுகள் உறுதியளித்தன.

ஆனால், அந்த இலக்கை அடைவதற்கான உறுதிமொழிகள் போதுமானவையாக இல்லை. சில சந்தர்ப்பங்களில் அவை புறக்கணிக்கப்படுகின்றன.

இந்நிலையில், உலகளாவிய சமூகம் போக்கை மாற்றாவிட்டால், இந்த நூற்றாண்டு மூன்று டிகிரி செல்சியஸிற்கும் அதிகமான பேரழிவுகரமான வெப்பநிலை அதிகரிப்பை நோக்கி உலகம் செல்லக்கூடும்.

நாங்கள் ஒரு வியத்தகு அவசரநிலையை எதிர்கொள்கிறோம் என்பதை யாராவது இனியும் மறுக்க முடியாது. அதனால்தான், இன்று, உலகெங்கிலும் உள்ள அனைத்து தலைவர்களையும் கார்பன் நடுநிலைமை அடையும் வரை தங்கள் நாடுகளில் காலநிலை அவசர நிலையை அறிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

பூமியின் வளிமண்டலத்தில் கூடுதல் பசுமை வாயுக்கள் காணப்படுவதில்லை. இதனால், கார்பன் நடுநிலைமை அடையும் வரை அவசரகால நிலை இருக்க வேண்டும்.

இந்நிலையில், காலநிலை அவசர நிலை நடவடிக்கையானது புதிய வேலைகள், சிறந்த ஆரோக்கியம் மற்றும் நெகிழ்க்கூடிய உட்கட்டமைப்பு ஆகியவற்றுக்கு ஊக்கியாக இருக்கும். - என அவர் தெரிவித்துள்ளார்.

## ட்ரம்ப் ஆதரவாளருக்கும் எதிர்ப்பாளருக்கும் அமெரிக்க வொஷிங்டனில் கடும் மோதல்கள்!

### நான்குபேர் மீது கத்திக் குத்து



அமெரிக்க தலைநகர் வொஷிங்டனில் ட்ரம்ப் ஆதரவாளர்களுக்கும் எதிர்ப்பாளர்களுக்கும் இடையே ஏற்பட்ட பயங்கர மோதலில் 4 பேருக்கு கத்திக்குத்து விழுந்தது.

அதிபர் தேர்தலில் முறைகேடு நடைபெற்றதாகக் கூறி ட்ரம்ப் ஆதரவாளர்கள் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். அதே பகுதியில் ட்ரம்பிற்கு எதிர்ப்பு தெரிவித்து சிலர் போராட்டத்தில் ஈடுபட, இரு தரப்புக்கும் இடையே திடீரென மோதல் மூண்டது.

இதில் 4 பேர் கத்திக் குத்துக்கு இலக்காகினர் என்றும் ஒருவர் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார் என்றும் தகவல் வெளியாகியுள்ளது.

மேலும், டரம்பின் ஆதரவாளர்கள் சிலர் கறுப்பின மக்களுக்கு ஆதரவான பனர்களை சாலைகளில் போட்டு தீயிட்டுக் கொளுத்தியமையால் அந்தப் பகுதியில் பதற்றமான சூழல் நிலவுகின்றது.

## கோவிட் தடுப்பூசி திட்டத்தை வெளியிடுகின்றது பிரேஸில்!

பிரேஸிலில் 2021 ஆம் ஆண்டு முதல் 6 மாத காலப்பகுதிக்குள் 51 மில்லியன் மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தில், சுகாதார பணியாளர்கள், முதியவர்கள் மற்றும் பழங்குடி சமூகத்தினருக்கு முன்னுரிமை வழங்கப்பட்டுள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.



இதற்கமைய, அவர்களுக்குத் தடுப்பூசி வழங்குவதற்காக 10 கோடியே 80 லட்சம் மருந்துகளை பெற்றுக் கொடுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அமெரிக்காவிற்குப் பிறகு உலகின் இரண்டாவது மிக மோசமாக கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளான நாடாக பிரேஸில் உள்ளது, அங்கு இதுவரை ஒரு லட்சத்து 80 ஆயிரத்துக்கும் அதிகமானோர் உயிரிழந்துள்ளனர்.

அடுத்த ஆண்டு கோவிட்-19 இற்கு எதிராக நாட்டின் அனைத்து மக்களுக்கும் தடுப்பூசி செலுத்தப்படும் என கடந்த வியாழக்கிழமை, சுகாதார அமைச்சர் எட்வர்டோ பசுவெல்லோ உறுதியளித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது.

## அமெரிக்காவில் ஒரேநாளில் 2 லட்சம் தொற்றாளர்!



அமெரிக்காவில் கடந்த 24 மணி நேரத்திற்குள் 2 லட்சத்து 20 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்களுக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கமைய, அமெரிக்காவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு கோடியே 65 லட்சத்து 49 ஆயிரத்து 366 ஆக அதிகரித்துள்ளது. அத்துடன், அமெரிக்காவில் கொரோனா தொற்றால் 3 லட்சத்து 5 ஆயிரத்து 82 உயிரிழப்புகள் பதிவாகியுள்ளன.

## நைஜீரியாவில் பாடசாலை மீது சூடு நூற்றுக்கு மேற்பட்டோரைக் காணோம்



நைஜீரியாவில் உயர்தர பாடசாலை ஒன்றின் மீது மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிப் பிரயோகத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட மாணவர்கள் காணாமல் போயுள்ளனர்.

வடமேல் நைஜீரியாவின் கட்சினா மாநிலத்தில் அமைந்துள்ள பாடசாலை யொன்றின் மீது அடையாளம் தெரியாத நபர்களால் நேற்று பிற்பகல் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், நைஜீரிய ஜனாதிபதி மொஹம்மது புகாரி இந்தத் தாக்குதல் சம்பவத்துக்குத் தமது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

மேலும் காணாமல் போன மாணவர்களைக் கண்டறியும் நடவடிக்கை முன்னெடுக்குமாறும் நைஜீரிய ஜனாதிபதி அதிகாரிகளுக்கு உத்தரவிட்டுள்ளார்.




## நாகோர்னோ - கராபாக் மோதல்: 4 வீரர்கள் சாவடைந்தனர்!

### அசர்பைஜான் குற்றச்சாட்டு



நாகோர்னோ - கராபாக் பிராந்தியத்தை அன்மித்த பகுதிகளில் இடம்பெற்ற தாக்குதலில் நான்கு அஜர்பைஜான் படை வீரர்கள் உயிரிழந்துள்ளனர்.

இதனை இன்று ஞாயிற்றுக்கிழமை அஜர்பைஜானின் பாதுகாப்பு அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.

ஆர்மீனியா ஆதரவு படையினரிடம் இருந்த நகோர்னோ - கராபத் மாகாணத்தின் முக்கிய நகரங்களை அசர்பைஜான் படையினர் கைப்பற்றினர்.

இந்த மாகாணம் அசர்பைஜானின் பகுதி என சர்வதேச நாடுகளால் அங்கீகரிக்கப்பட்டுள்ள போதும் 1994 ஆம் ஆண்டு முதல் இரு நாடுகளுக்கும் இடையே நடந்த போரில் மாகாணத்தின் பெரும் பகுதியை ஆர்மீனியா கைப்பற்றியது.

குறித்த மாகாணத்தை மையமாகக் கொண்டு பல ஆண்டுகளாக ஆர்மீனியா - அசர்பைஜான் இடையே மோதல்கள் அரங்கேறி வருகின்றன.

இந்நிலையில், ஆர்மீனியா - அசர்பைஜான் இடையே ரஷ்யா முன்னிலையில் கடந்த மாதம் 10 ஆம் திகதி முதல் போர் நிறுத்த ஒப்பந்தம் கையெழுத்தான போதும் உடன்படிக்கையை மீறியதாக இரு தரப்பினரும் குற்றம் சாட்டி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# வாக்கெடுப்பில் பங்கெடுக்காத விக்னேஸ்வரன் இருவித நல்லெண்ணத்தை வெளிப்படுத்தினார்!

## கூட்டமைப்புடன் கூட்டிணையவும் வாய்ப்பு

தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும், யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரன் வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் பங்கெடுக்காததன் மூலமாக இரண்டு நல்லெண்ண சமிக்ஞைகளை வெளிப்படுத்தியுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

முதலாவதாக, ராஜபக்ஷ அரசாங்கம் பதவிக்கு வந்து முதலாவது வரவு - செலவுத் திட்டமாகக் காணப்படுவதன் காரணமாக அதனை எதிர்க்காது ஒரு வாய்ப்புக் கொடுப்பதற்கு விழைந்திருந்தார் என்று கூறப்படுகின்றது.

அதுமட்டுமன்றி, தனது நாடாளுமன்ற உரையொன்றில், இனப்பிரச்சினைக்கு சமஷ்டி அடிப்படையிலான தீர்வொன்றை வழங்காது விட்டால் ஜனாதிபதி கோட்டாபயவும், பிரதமர் மஹிந்தவும் சர்வதேச நாடுகளுக்கு ஏறி இறங்கும் நிலை ஏற்படும் என்றும் எச்சரித்திருந்தார்.

ஆகவே, அவ்விதமான எச்சரிக்கையும் செய்துள்ள நிலையில் ராஜபக்ஷ அரசுக்கும் வாய்ப்பொன்றை வழங்குவதற்கான முதற் சந்தர்ப்பமாக வரவு - செலவுத் திட்டத்தை எதிர்ப்பதில்லை என அவர் தீர்மானம் எடுத்தார் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, வரவு - செலவுத் திட்ட விடயத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மூன்று கட்சிகளின் பிரதிநிதிகளுடனும் தனித்தனியாக தொலைபேசி மூலம் கலந்தாலோசித்திருக்கின்றார் விக்னேஸ்வரன்.

குறிப்பாக, தமிழரசுக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், புளொட் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான சித்தார்த்தன், ரெலோ தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினருமான செல்வம் அடைக்கலநாதன் ஆகியோருடன் விக்னேஸ்வரன் கலந்துரையாடியிருந்தார்.

வரவு - செலவுத் திட்டத்தில் அவர்கள் எவ்விதமான நிலைப்பாடுகளைக் கொண்டிருக்கின்றார்கள் என்றும், கூட்டமைப்பின் இறுதியான முடிவைத் தன்னுடன் பகிர்ந்து கொள்ளுமாறும் கோரியிருக்கின்றார்.

இதனையடுத்து கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூட்டம் நிறைவடைந்த பின்னர் கூட்டமைப்பின் 'வரவு செலவுத்திட்ட வாக்கெடுப்பில் பங்குபற்றுவதில்லை' என்ற தீர்மானம் விக்னேஸ்வரனுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அதன்போது, தானும் வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாதிருக்கும் தீர்மானத்தினையே கொண்டிருப்பதாக கூறி நிலைப்பாட்டை பகிர்ந்துள்ளார் எனக் கூறியுள்ளார்.

இதேவேளை, நாடாளுமன்ற உறுப்பினர் சிறிதரன், நெடுந்தீவு தொல்பொருள் விவகாரம் உள்ளிட்டவற்றை மையப்படுத்திய உரையாற்றியதன் பின்னர் அவர் அருகில் சென்று அந்த உரையை சிங்கள, ஆங்கில மொழிகளில் மொழிபெயர்த்து ஊடகங்களுக்கு அனுப்புமாறும் அறிவுரை கூறியும் இருக்கின்றார் விக்னேஸ்வரன்.

ஆகவே விக்னேஸ்வரனின் இவ்விதமான நகர்வுகள், ராஜபக்ஷவினருக்கு சந்தர்ப்பம் அளிக்கும் அதேநேரம் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் கூட்டிணைந்து செயற்படுவதற்குமான 'நல்லெண்ண சமிக்ஞை'ஆக உள்ளதென்றுகூறப்படுகின்றது.

# சுகாதார விதிமுறை பேணத் தவறியோர் 24 மணி நேரத்தில் 60 பேர் கைதாகினர்

முகக் கவசம் அணியத் தவறிய மற்றும் சுகாதார ஆலோசனைகளை பின்பற்றத் தவறிய குற்றச்சாட்டுக்காக 24 மணிநேரத்தில் 60 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

ஒன்பது பொலிஸ் பிரிவுகளிலும், 25 கிராம சேவகர் பிரிவுகளிலும் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு தொடர்ந்தும் அமுலில் இருக்கும் என பொலிஸ் ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

எனவே, எடுக்கப்பட்ட முன்னெச்சரிக்கைகள் தொடர்பாக பொதுச் சுகாதார பரிசோதகர் களுடன் ஒத்துழைப்பு வழங்குமாறும் பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

# கொரோனாவிலிருந்து 489 பேர் குணமடைவு!

கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளான மேலும் 489 பேர் பூரணமாக குணமடைந்து இன்று (ஞாயிற்றுக்கிழமை) வீடுகளுக்கு திரும்பியுள்ளனர் என சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனையடுத்து, இலங்கையில் இதுவரை 23 ஆயிரத்து 793 பேர் கொரோனா தொற்றில் இருந்து பூரணமாகக் குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளனர்.

இலங்கையில் இதுவரையில் 32 ஆயிரத்து 135 பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறதி செய்யப்பட்டுள்ளது. அவர்களில் 23 ஆயிரத்து 793 பேர் குணமடைந்துள்ள நிலையில், 8 ஆயிரத்து 193 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை, கொரோனா தொற்றுக்கு உள்ளான 149 பேர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தொற்றுக்கு உள்ளான நோர்வூட் மாணவர்கள் தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு சென்றனர்!




கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்கான நோர்வூட் தமிழ் மகா வித்தியாலய மாணவர்கள் இருவரும் கொவிட் - 19 தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு சுகாதார பாதுகாப்பு ஏற்பாடுகளுக்கு மத்தியில் இன்று (ஞாயிற்றுக்கிழமை) அழைத்துச் செல்லப்பட்டனர்.

வைரஸ் தொற்றியுள்ள மாணவி மாத்தறை கம்புறுபிட்டியவில் உள்ள சிகிச்சை நிலையத்துக்கும் மாணவன் ஹம்பாந்தோட்டையிலுள்ள சிகிச்சை நிலையத்துக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர்.

நோர்வூட் தமிழ் மகா வித்தியாலயத்தில் பணியாற்றும் ஆசிரியையொருவருக்கு அண்மையில் கொரோனா வைரஸ் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

இதனையடுத்து அவருடன் தொடர்பில் இருந்த மாணவர்களும் ஆசிரியர்களும் தனிமைப்படுத்தப்பட்டனர். அவர்களிடம் பி.சி.ஆர் பரிசோதனைக்கான மாதிரிகள் பெறப்பட்டன.

பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகள் நேற்று 12ஆம் திகதி வெளியாகின. இதில் குறித்த பாடசாலையில் தரம் 9 இல் கல்வி பயிலும் மாணவருக்கும் மாணவிக்கும் வைரஸ் தொற்றிருப்பது கண்டறியப்பட்டது.

இந்த நிலையிலேயே, அவர்கள் சிகிச்சைநிலையங்களுக்குக்கொண்டு செல்லப்பட்டுள்ளனர். அவர் களுடன் தொடர்பில் இருந்த சுமார் 12 குடும்பங்களைச் சேர்ந்த 60 இற்கும் மேற்பட்டோர் சுயதனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

# 2019 உயர்தரப் பரீட்சை மதிப்பெண்கள்; அடிப்படை உரிமை மனு டிசெம்பர் 16இல்!

2019 உயர்தர பெறுபேறுகளின் படி பல்கலைக்கழகங்களில் பொறியியல் மற்றும் இயற்பியல் பாடங்களுக்காக மாணவர்களை உள்வாங்குவதை இடைநிறுத்த, இடைக்கால தடை உத்தரவு கோரி தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் மனு மீதான பரிசீலனை எதிர்வரும் 16 ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

இந்த மனு நேற்றையதினம் எடுத்துக் கொள்ளப்படவிருந்தது.

எனினும் புவனக அலுவிஹர, எஸ். துரைராஜா, மற்றும் யசந்த் கோத்தா கொட ஆகிய மூன்று பேர் கொண்ட நீதிபதிகள் தலைமையிலான குழாம் மேற்கண்ட அறிவிப்பை அறிவித்தது.

2019 ஆம் ஆண்டின் உயர்தர பரீட்சைக்கு புதிய பாடத்திட்டத்தின் கீழ் தோற்றி சித்தியடைந்த மாணவர்களால் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

புதிய பாடத்திட்டத்துக்கும், பழைய பாடத் திட்டத்துக்கும், மதிப்பெண்களுக்கு இடையே பாரிய வேறுபாடுகள் காணப்படுகின்றன என இவர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

இதனால் தமக்கு பெரிய அநீதி இடம்பெற்றுள்ளதாகவும், தமது அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளள எனவும் தெரிவித்து இரண்டு பாடத்திட்டங்களுக்கும் சமனான அல்லது நியாயமான இசட் மதிப்பெண்களை வழங்கும் படி உத்தரவு பிறப்பிக்குமாறு மனுதாரர்கள் கேட்டுக்கொண்டுள்ளனர்.

கல்வி அமைச்சர், அமைச்சின் செயலாளர், பரீட்சை ஆணையாளர், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு மற்றும் அதன் தலைவர் அத்துடன் சட்டமா அதிபர் ஆகியோரை மனுவில் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டுள்ளனர்.

# பல நோக்கு அபிவிருத்தி செயலணியின் பணிப்பாளர் நாயகம் நேற்று யாழ்.விஜயம்!



கொழும்பு, டிசெ.13

பல நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் நேற்று சனிக்கிழமை யாழ். மாவட்ட செயலகத்துக்கு விஜயத்தை மேற்கொண்டு கலந்துரையாடியுள்ளார்.

ஒரு லட்சம் பேருக்கு தொழில் வாய்ப்பு வழங்கும் திட்டத்தை பல நோக்கு அபிவிருத்தி செயலணி திணைக்களம் ஆரம்பித்து நாடளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தி வருகின்றது.

அந்த வகையில் மாவட்டத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ள பயிற்சித் திட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பாக கலந்துரையாடுவதற்காக பல நோக்கு அபிவிருத்தி செயலணித் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மேஜர் ஜெனரல் நந்தன மல்லவராட்சி யாழ்.மாவட்ட செயலகத்துக்கு நேற்று விஜயம் மேற்கொண்டிருந்தார்.

இக்கலந்துரையாடலில் மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் உட்பட பல உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டனர்.

இலங்கையில் தற்போது வெளிநாடுகளில் இருந்தே பொருள்கள் இறக்குமதி செய்யப்படுகிறன. இந்நிலைமையை மாற்ற தற்போது தெரிவு செய்யப்பட்ட உத்தியோகத்தர்கள் ஊடாக மொடல் பார்ம் ஒன்றை உருவாக்கி இவ்வாறான நிலைமைகளை இல்லாமல் செய்ய வேண்டும் என பணிப்பாளர் நாயகம் குறிப்பிட்டுள்ளார்.

# இலங்கையில் உயிரிழந்தால் மாலைதீவில் நல்லடக்கமாம்!

## தயாராகின்றது அரசு

இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழப்போரின் உடல்களை அடக்கம் செய்ய மாலைதீவு அரசாங்கம் சம்மதம் தெரிவித்திருப்பதாக தகவல் வெளி யாகியுள்ளது.

இலங்கை அரசாங்கம் விடுத்த வேண்டுகோளை மாலைதீவு அரசாங்கம் ஏற்றுக்கொண்டு பதிலளித்திருப்பதாகவும் ஊடகமொன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இலங்கையில் கொரோனா தொற்றால் உயிரிழக்கும் ஜனாஸாக்கள் எரிக்கப்படுவதால் முஸ்லிம் மக்களிடையே கடும் எதிர்ப்புக்கள் காணப்படுகின்றன.

இதனால் முஸ்லிம் மக்கள் பலரும் கொரோனா பரிசோதனையை நடத்த முன்வரவில்லை.

மேற்படி பிரச்சினைகளுக்குத் தீர்வாக இலங்கை அரசாங்கம், மாலைதீவிடம் கோரிக்கை முன்வைத்திருந்த நிலையில் ஜனாஸாக்களை அடக்கம் செய்ய அந்நாட்டு அரசு சம்மதம் தெரிவித்திருப்பதாகத் தகவல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 13.12.2020 இல் வெளியிடப்பெற்றது.